STC.No. 11/2025
நாள் 09.01.2026.
P.W.1 – (குருசாமி )
எதிரி ஆஜர்.
எதிரி தரப்பில் **குறுக்கு விசாரணை**

எதிரியின் மனைவி பிள்ளைகளின் பெயர் எனக்கு தெரியாது. எதிரியின் குடும்பத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் என்ற விபரம் எனக்கு தெரியாது. எதிரியின் மனைவி பிள்ளைகள் பெயரில் சொத்துகள் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. நான் எதிரியின் வீட்டிற்கு சென்றது இல்லை என்றால் சரியல்ல, சென்றுள்ளேன். எதிரியின் வீட்டு முகவரி தெரியும். எதிரி எனக்கு ஏற்கனவே பழக்கம் என்பதால் எனக்கு அவர் வீட்டு முகவரி தெரியும். எதிரி என் வீட்டிற்கு வந்துள்ளார். எதிரி இராஜபாளையம் தென்காசி ரோட்டில் ஒரு சாதாரண டீக்கடை நடத்தி வருகிறார் என்றால் சரி. அந்த டீக்கடை ஒரு நாளைக்கு ரூ.500/– முதல் ரூ.1,000/– வரை வியாபாரம் நடைபெறும் டீக்கடை என்றால் சரியல்ல. ரூ.10,000/–ற்கும் வியாபாரம் நடைபெறும். நான் ரூ.10,000/– என இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரியின் பெயரில் என்ன அசையும் மற்றும் அசையா சொத்துகள் உள்ளது என எனக்கு தெரியாது என்றால் எதிரியின் பெயரில் ஒரு தோப்பு உள்ளது. அந்த தோப்பு சம்மந்தமான ஆவணத்தை நான் வாங்கி வைத்துக் கொள்ளவில்லை. எனக்கும் எதிரிக்கும் 2020ம் ஆண்டு முதல் பழக்கம்.

நான் கேபிள் டிவி தொழில் மற்றும் ரியல் எஸ்டேட் தொழில் செய்கிறேன். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். 2018ம் ஆண்டு முதல் செலுத்தி வருகிறேன். நான் இந்த வழக்கில் சொல்லியுள்ள கடன் தொகையை என் வருமான வரிக் கணக்கில் காண்பிக்கவில்லை. நான் வழக்கில் சொன்னதுபோல் கடன் கொடுக்காததால் வருமான வரிக் கணக்கில் நான் அந்த தொகையை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. எதிரி அவசர தேவைக்காக எதிரி என்னிடம் பணம் வாங்கியதாக நான் புகாரில் சொன்னது என்ன அவசர தேவை என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஆம், நான் அவரிடம் என்ன அவசர தேவை எனக் கேட்கவில்லை. நான் வழக்கில் எதிரிக்கு கொடுத்ததாக சொன்ன கடன் தொகைக்கு வட்டி பேசிக் கொள்ளவில்லை என்றால் சரி. நான் வழக்கில் சொன்ன கடன் தொகைக்கு ஆதரவாக புரோநோட்டு அல்லது சொத்து ஆவணம் ஏதும் எதிரியிடம் இருந்து பெறவில்லை. கடன் கொடுத்ததாக சொன்ன தேதியில் அதற்கு ஆதரவாக நான் எந்த ஆவணமும் வாங்கவில்லை என்றால் சரி.

நான் வழக்கில் கொடுத்ததாக சொல்லும் ரூ.10 லட்சம் எனக்கு எப்படி வந்தது என்று என் புகார் மனுவில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி. வழக்கில் கண்ட பெரிய தொகை ரூ.10 லட்சத்தை எந்த வித ஆவணமும் வாங்காமல் நான் எதிரிக்கு வழங்கியிருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல.

வழக்கில் கண்ட ரூ.10 லட்சத்தை எந்த வித சொத்தும் வருமானம் இல்லாத எதிரிக்கு நான் கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. சாட்சி சுந்தர மகாலிங்கம் என்பவர் என் மருமகன் ஆவார். என் மகளை திருமணம் செய்தவர் ஆவார். இராஜபாளையம் கணபதியாபுரத்தில் குடியிருந்து தற்போது வீரதர்மாபுரத்தை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவரை எனக்கு நன்கு தெரியும் என்றால் ஆம். ராதாகிருஷ்ணனின் மகளை எதிரியின் அக்கா மகனிற்கு திருமணம் செய்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. ராதாகிருஷ்ணன் என்பவருக்கு 2021ம் ஆண்டு கடன் கொடுத்திருந்தேன் என்றால் சரியல்ல. நான் அவரிடம் கிரயம் வாங்கியிருந்தேன். எனக்கும் ராதாகிருஷ்ணனுக்கும் தற்போது எந்த கடனும் நிலுவையில் இல்லை என்றால் சரி. 27.09.2021 அன்று ராதாகிருஷ்ணன் என்பவருக்கு நான் ரூபாய் நான்கரை லட்சம் கடனாக கொடுத்திருந்தேன் என்றால் இல்லை. அந்த கடனிற்கு ஆதரவாக இராஜபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் வைத்து ராதாகிருஷ்ணனுக்கு சொந்தமான வீட்டை நம்பிக்கை கிரயமாக எழுதி வாங்கினேன் என்றால் சரியல்ல. அந்த கிரய ஆவணத்தில் எதிரி சாட்சி கையொப்பம் செய்திருந்தார் என்றால் ஆம்.

நான் ராதாகிருஷ்ணனிடம் கிரயம் வாங்கியதாக சொல்லும் வீட்டில் ராதாகிருஷ்ணன் மற்றும் அவர் குடும்பத்தார் தற்போது வரை குடியிருந்து வருகிறார்கள் என்றால் ஆம். நான் வாடகைக்கு விட்டுள்ளேன். நான் வாடகைக்கு விட்டீருப்பதாக சொல்வதற்கு ஒப்பந்தம் ஏதும் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. ராதாகிருஷ்ணன் வாடகைக்கு குடியிருப்பதாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ராதாகிருஷ்ணனிடம் கொடுத்த கடனிற்கு ஆதரவாக நம்பிக்கை கிரய ஆவணத்தில் எதிரி சாட்சிய கையொப்பம் செய்தபோது நான் தாவா காசோலையை எதிரியிடம் இருந்து ஆதரவுக்காக வாங்கியிருந்தேன் என்றால் சரியல்ல. ராதாகிருஷ்ணனுக்கு கொடுத்த கடனை அவர் திரும்ப செலுத்தாததால் எதிரி ஆதரவாக கொடுத்த காசோலையை நான் தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. ராதாகிருஷ்ணன் மேற்சொன்ன விபரங்கள் தொடர்பாக விசாரிக்க எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரி. நான் புகார் மனுவில் சொன்ன தேதியில் எந்த கடனும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.

வழக்கு காசோலை Payment Stopped காரணத்திற்காக திருப்பட்டது. என்ன காரணத்திற்காக Stop Payment ஆனது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரி. அதற்காக வங்கி மேலாளரை விசாரித்தால் அந்த காரணம் தெரியவரும் என்றால் சரி. ராதாகிருஷ்ணன் கடனிற்கு ஆதரவாக கொடுத்த காசோலையை நான் முறையற்ற முறையில் வசூலுக்கு தாக்கல் செய்தததால் அந்த காசோலை Stop Payment எனத் திருப்பப்பட்டது என்றால் சரியல்ல. பு.சா.ஆ.1 காசோலையில் கையொப்பம் ஒரு பேனாவாலும் ஏனைய விபரங்கள் வேறு பேனாவாலும் எழுதப்பட்டு வேறுபாடுகளாக காணப்படுகிறது என்றால் இல்லை. பு.சா.ஆ.1 காசோலையை வெவ்வேறு பேனா மையால்

எழுதப்பட்டுள்ளது என்றாலும் வழக்கிற்காக அவ்வாறு காணப்படவில்லை என நான் பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சட்ட அறிவிப்பை எதிரி பெற்றுக் கொள்ளவில்லை என்றால் எதிரி திருப்பி அனுப்பிவிட்டார். நான் எதிரிக்கு சட்ட அறிவிப்பை முறையான முகவரிக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. நான் புகார் மனுவில் சொன்னதுபோல் எதிரிக்கு பணம் கொடுக்கவில்லை என்றாலும் எதிரி காசோலை கொடுக்கவில்லை என்றாலும் புகார் மனு நிலைக்கத் தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

ரூ.10 லட்சம் என்ற பெரும் தொகையை குறுகிய கால கடனாக எவ்வித ஆவணமும் இன்றி கொடுத்திருக்க வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. எதிரி எனக்கு கொடுக்க வேண்டிய சட்டப்படியான தொகை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லி தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

நீதித்துறை விரைவு நடுவர்,
திருவில்லிபுத்தூர்.